# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - 2012 - 2013

## தமிழ்மொழி - வளர் தமிழ் 5

சுட்டெண்:........................................................ நேரம்: 150 மணித்துளிகள்

**1) கீறிட்ட இடங்களில் பொருத்தமான விடையைத் தேர்ந்து எழுதுக.**

1. வேறொரு நாட்டில் இருந்து பொருட்களை இந்நாட்டுக்குள் கொண்டு வருவது ________________ .

   (ஏற்றுமதி, இறக்குமதி, செய்மதி)

2. நான்கு காளைகளும் ஒன்றாகச் ________________ சிங்கத்தைத் தாக்கின.

   (பிரிந்து, மறந்து, சேர்ந்து)

3. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துகள் ________________ .

   (216, 246, 247)

4. யாதும் ஊரே யாவரும்________________ .

   (கேளிர், கேழிர், கேலிர் )

5. உலகில் மழை பெய்வதற்குக் கரணியமானவன்

________________________ .

(மன்னன், உழவன், கதிரவன்)

6. தஞ்சைப் பெருங்கோவிலில் உள்ள ________________ உலக மக்களை வியக்க வைக்கிறது.

(கோபுரம், கற்சங்கிலி, ஓவியம்)

7. குறள்:- முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து

அகநக நட்பது ________________ .

(நட்பு, அன்பு, பகை)

8. மாமல்லபுரத்தைச் சிற்பக்காடாக்கிய மன்னன் ________________ .

(இராசஇராசன், குலோத்துங்கன், நரசிம்மபல்லவன்)

9. பால் + குடம் என்பதைச் சேர்த்து எழுதினால்

________________________ .

(பாற்க்குடம், பாற்குடம், பால்க்குடம்)

10. நாம் ________________ நட்பைத் தேடிப் பெறவேண்டும்.

(நல்லோர், தீயோர், சிறியோர்)

11. பூவுடன் சேர்ந்த ________________ மணக்கும்.

(பேரும், ஊரும், நாரும்)

12. சிங்கம் முழங்கியது. சிங்கங்கள் ________________ .

(முழங்கும், முழங்கின, முழங்குகின்றன)

13. பரதத்தின் பண்டைய பெயர் ______________________ .

(கூத்து, ஆட்டம், நடனம்)

14. தமிழர்கள் ____________ இருந்து குதிரையை இறக்குமதி செய்தனர்.

(ஆபிரிகாவில், அரேபியாவில், ஐரோப்பாவில்)

15. நாம் என்றும்____________________ தாய்நாட்டை மறக்கக் கூடாது.

(உமது, எனது, எமது)

16. மான்குட்டி ________________ விளையாடியது.

(துள்ளித்துள்ளி, தாவித்தாவி, பாய்ந்துபாய்ந்து)

17. கதிரவன் காலித்தான். இதில் காலித்தல் என்பது ________________ .

(தேய்தல், எழுதல், மறைதல்)

18. ஒவ்வொருவரும் __________________ பழம் சாப்பிட்டார்கள்.

(ஒன்று, ஒவ்வொரு, ஒன்று ஒன்று)

19. தைப்பொங்கல் திருநாளில் ____________________ பண்பாடு மேலோங்கி நிற்கிறது.

(கலாச்சாரப், கொண்டாட்டப், விருந்தோம்பற்)

20. ஆழ் பெருங்கடலை ____________________ என்பர்.

(ஆழி, ஆலி, ஆளி)

21. தமிழர் வணிகம் பற்றிக் கூறும் நூல் __________________ .

(தொல்காப்பியம், சிலப்பதிகாரம், ஆத்திசூடி)

22. ஒற்றுமை இல்லாவிடின்____________________ விளையும்.

(செல்வம், நன்மை, கேடு)

23. வளவன் தன் குடும்பத்துக்காக ________________
உழைத்தான்.

(அல்லும்பகலும், கையும்மெய்யுமாக, இன்பதுன்பம்)

24. ஆறு கடலோடு கலக்கும் இடம் ________________ .

(கடலாறு, கழிமுகம், கடற்கரை)

25. தமிழர்களால் தைப்பொங்கல் ________________ .

(கொண்டாடப்படுகிறது, கொண்டாடுகிறார்கள், கொண்டாடுவர்)

26. பவளக்கொடி எனும் பாடலைப் பாடியவர் ________________ .

(ஔவையார், திருவள்ளுவர், சோமசுந்தரப்புலவர்)

27. கோயில் மணி ________________ என ஒலி எழுப்பியது.

(பளீர் பளீர், கலகல, கணீர்கணீர்)

28. பொங்கலன்று ________________ நீராடிப் புத்தாடை புனைவர்.

(மதியத்தில், வைகறையில், மாலையில்)

29. வையகம் என்ற சொல் குறிப்பது ________________ .

(உலகத்தை, நாட்டை, காட்டை)

30. தைப்பொங்கலின் மறுபெயர்களில் ஒன்று ________________ .

(பட்டிப்பொங்கல், உழவர்திருநாள், மாட்டுப்பொங்கல்)

புள்ளிகள் 30

2) கீறிட்ட இடங்களில் மிகப்பொருத்தமான சொல்லை எழுதுக.

| | | |
|---|---|---|
| பழகப்பழக | திரள்திரளாகச் | கையும்மெய்யுமாக |
| தன்னந்தனியாக | கண்ணுங்கருத்துமாக | |

1. மாவீரர் நாளுக்கு மக்கள் ______________________ சென்றனர்.

2. நல்லோருடைய நட்பு ______________________ இன்பம் தரும்.

3. தாயகத்தில் பெற்றோரை இழந்த குழந்தைகள் ______________________ வாழ்கின்றனர்.

4. தாய் தன் குழந்தையைக் ______________________ வளர்க்கின்றாள்.

5. கள்வன் ______________________ ப் பிடிபட்டான்.

புள்ளிகள் 10

3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு விடை தருக.

1. பழந்தமிழர் வணிகம் செய்த நாடுகள் எவை?

2. காளைகள் எதனால் சிங்கத்தை வென்றன?

3. நாம் எங்கு வாழ்ந்தாலும் எப்படி வாழவேண்டும்?

4. மாட்டுப்பொங்கல் ஏன் கொண்டாடப்படுகிறது?

5. கூத்தர் என்பவர் யாவர்?

6. தஞ்சைப் பெரிய கோவில் யாரால் கட்டப்பட்டது?

7. நல்லோர் நட்பு எத்தகையது?

புள்ளிகள் 10

4) பாடல் வினாக்களுக்கு முழுவிடை தருக.

*தேன் இருக்கும் இடத்தினைத்*
*தேடி மொய்க்கும் வண்டு போல்*
*சீனி உள்ள இடத்தினைத்*
*தேடி ஊரும் எறும்பு போல்*
*பழம் நிறைந்த சோலையைப்*
*பார்த்துச் செல்லும் கிளியைப் போல்*
*வளம் நிறைந்த நாட்டிலே*
*வந்து சேரும் மக்கள் போல்*
*பள்ளமான இடத்தினைப்*
*பார்த்துப் பாயும் வெள்ளம் போல்*
*நல்ல நல்ல நூல்களை*
*நாடி நாமும் பயிலுவோம்.*

1. பழம் நிறைந்த சோலையைப் பார்த்துச் செல்வது எது?

_______________________________________________

2. வளம் நிறைந்த நாட்டிலே யார் வந்து சேர்வார்கள்?

_______________________________________________

3. வண்டு எங்கே மொய்க்கும்?

_______________________________________________

4. பள்ளமான இடத்தில் பாய்வது எது?

_______________________________________________

5. நாம் எப்படியான நூல்களைப் பயில வேண்டும்?

_______________________________________________

புள்ளிகள் 10

5) **மிகப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்து கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| சத்துள்ள | சீராக | தூய்மையான |
| செரிப்பதற்கும் | உடனலம் | |

உடலுக்குக் கட்டாயமாக தேவைப்படுவது உணவு. உடலை நோய் வராமல் காப்பதற்கும் நல்ல நிலையில் வைத்திருப்பதற்கும் ______________ உணவு தேவை. நாம் உட்கொள்ளும் உணவு சமநிலை உணவாக இருத்தல் வேண்டும். உடலில் உள்ள பல உறுப்புகள் ______________ இயங்கத் தேவையான வலுவைத் தருவது உணவு. நாம் உடலுக்கேற்ற உணவை அறிந்து உண்டால் நோய்கள் வராமல் தடுக்கலாம். ______________ நீரும் உடல் நலத்திற்கு இன்றியமையாதது. நீர் உடல் வெப்பத்தைக் குறைப்பதோடு நன்றாகச் ______________ வழிவகுக்கும். தூய்மையான வளியை உயிர்த்தலும் ______________ பேணும் வழியாகும். இயற்கையான சூழலில் காலை மாலையில் உலவி வருதலும் உடற்பயிற்சி செய்தலும் மிகவும் நன்று.

புள்ளிகள் 10

## 6 . பந்தியை வாசித்து ; வினாக்களுக்கு முழுவிடை தருக.

காகம் கறுப்பு நிறப் பறவை. அது கா!கா! என்று கரையும். காகம் மரங்களில் கூடு கட்டும். கூட்டில் முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்கும். காகம் கவனக் குறைவாக இருப்போர் கைகளில் உள்ள உணவைத் தட்டிப் பறிக்கும். இரையைக் கண்டால், தான் தனித்து உண்ணாது. கா!கா! என்று கரைந்து மற்றக் காக்கைகளையும் அழைத்துக் கூடி உண்ணும். தமிழ் இலக்கியங்களில் காகத்தைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. மாந்தன் காகத்திடம் இருந்து கற்கவேண்டிய பண்புகள் நிறைய உண்டு. உறவுகளோடு கூடி உண்ணல், உறவாடி மகிழ்தல், வைகறையில் துயில் எழுதல், மாலையில் நீராடல், எங்கும் தங்காது கூட்டிற்கே திரும்புதல் என்பன காகத்தின் சிறந்த பண்புகள் ஆகும். காகத்தைப் போல பகுத்து உண்டு வாழ்வோரே வாழ்வில் உயர்வர் என்கிறது குறள்.

1. தனித்து உண்ணாது தன் இனத்தை அழைத்துக் கூடி உண்ணும் பறவை எது?

   ________________________________________

2. காகம் எப்போது துயில் எழும்?

   ________________________________________

3. அது எங்கே கூடு கட்டும்?

   ________________________________________

4. காகத்திடம் இருக்கும் பண்புகள் இரண்டு கூறுக?

   ________________________________________

5. காகத்தைப் போல வாழ வேண்டும் என்று கூறுவது எது ?

   ________________________________________

**புள்ளிகள் 10**

**7) பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

எனது வீடு அழகானது. எனது வீட்டில் மூன்று அறைகள் உள்ளன. எனது வீட்டு எண் 10. எனது வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு பெரிய பூங்கா உண்டு. அங்கு நான் அப்பாவுடன் செல்வேன்.

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

புள்ளிகள் 05

**8) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 60 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

★ தமிழர் தொல்வணிகம்

★ ஒற்றுமையே வலிமை என்ற பாடத்தை உமது உரைநடையில் எழுதுக.

★ நீரும் உமது நண்பரும்

புள்ளிகள் 15